# கௌதில்யரின் அர்த்த சாத்திரத்தில் வெளிப்படும் தலைமைத்தும் ஓர் ஆழ்நிலை ஆய்வு
# A Critical Analysis on the Leadership Aspects of *Kautilya's Arthashastra*


வினோத் நல்லிசாமி / Venoth Nallisamy[1]

பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் / Professor Dr. M. Rajantheran[2]

முனைவர் க.சில்லாழி / Dr K.Silllalee[3]



## Abstract

The *Arthashastra* is an ancient Indian treatise which covers various subjects such as statecraft, economic management, human resource management, law and order, diplomacy and foreign policy, as well as war and definitions of strategies. Numerous researchers have explored the leadership concepts and models expounded in the *Arthashastra* and enriched the existing body of literature on this subject, which has enabled their application in the modern context. In this article, the authors conducted a critical analysis on the aspects of leadership in Kautilya's Arthashastra.



Date of submission: 2021-10-11
Date of acceptance: 2021-10-30
Date of Publication: 2021-12-25


Corresponding author's Name:
Dr K.Silllalee
Email: silllalee@um.edu.my



**Key Words:** Leadership, Kautilya, Arthashastra, Management, statecraft


### முன்னுரை

அர்த்தசாத்திரம் எனப்படுவது கௌத்தில்யர் எனப்படும் அறிஞரால் இயற்றப்பட்ட பழம்பெறும் இந்திய நூலாகும். கௌத்தில்யர், சந்திரகுப்த மௌரியப் பேரரசு ஆட்சியில் அந்நாட்டின் பிரதம மந்திரியாகவும், இராஜ குருவாகவும் விளங்கியவர். சந்திரகுப்த மௌரியரின் ஆட்சி காலத்தில் இவரது வழிகாட்டுதலின் பேரிலும் இவரது அரசியல் சாணக்கியத்தினாலுமே அந்த அரசு மிகப்புகழ் பெற்ற பேரரசாக உருவாக்கம் கண்டது. அத்தகைய புகழும் தொண்மையும் மிக்க கௌதில்யரின் படைப்பான அர்த்த சாத்திரம் வரலாற்றில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் காணாமல் போயிருந்தது வியத்தகு உண்மையே. ஆனாலும் 1904ஆம் ஆண்டு ஆச்சரியத்தக்க விதத்தில் கிரந்த எழுத்துக்களில் அர்த்த சாத்திரம் பனை ஓலைச் சுவடிகளில் மீண்டும் கிடைக்கப்பெற்றது. இதனைக் கண்டறிந்தவர் ஆர். ஷமாசாஸ்திரி (R.Shamasastry). இவர் இந்நூலில் அடங்கியுள்ள சிறப்புகளைக் கண்டு வியந்து


[1] The author is a Masters research scholar in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. venoth2001@yahoo.com

[2] The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@um.edu.my

[3] The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. silllalee@um.edu.my

இதனை நூலாக வெளியிடும் முயற்சியை மேற்கொண்டார். அவ்வகையில் 1909ஆம் ஆண்டில் முதல் பதிப்பாக அர்த்த சாத்திரத்தை சமஸ்கிரத உரை மொழியில் வெளியீடு செய்தார். அதனைத் தொடர்ந்து 1915ஆம் ஆண்டில் ஆங்கில மொழிபெயர்ப்பாகவும், குறியீட்டு மொழியிலும் வெளியீடு செய்தார் (Rangarajan, 1992, p. 8). இதனைத் தவிர்த்து மற்ற அறிஞர் மற்றும் கல்வியாளர்களும் கூட அர்த்தசாத்திரத்தை ஆய்வு செய்து பல உபநூல்களை இயற்றினர்.

அர்த்தசாத்திரம் இயற்றப்பட்டதன் முதன்மை நோக்கமே அரசாட்சி, அரசியல், அரசு நிர்வாக உத்திகளைப் பற்றிய விளக்கத்தைத் தருவதுவே ஆகும். ஆயினும் இந்நூலை ஆழ்ந்து ஆய்வு செய்யும் போது மட்டுமே இதனுள் புதைந்துள்ள மிகவும் உன்னதமான புதிய செய்திகள் வெளிப்படும். அர்த்தசாத்திரத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து செய்திகளுமே தலைமைத்துவம் எனும் மையக்கருவை முன்னிருத்தியே எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மேலும் தலைமைத்துவம் குறித்த பல்வேறு தகவல்களும் சிந்தனைகளும் இந்நூலில் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ எடுத்தாளப்பட்டுள்ளன. இச்சிந்தனையின் அடிப்படையில் தற்போதைய ஆய்வானது அர்த்தசாத்திரத்தில் காணப்படும் தலைமைத்துவத்தை ஆய்வு செய்து விமர்சன மதிப்பாய்வாய் வழங்குகின்றது.மாய்

### ஆய்வின் கண்டுபிடிப்புகளும் விளக்கமும்

தொடக்கமாக கிருஷ்ணன் என்பார் தனது அர்த்தசாத்திரம் (2009) எனும் நூலில் மன்னராட்சியை உடைய மௌரியப் பேரரசில் சமகாலச் சிந்தனைகளாகக் குறிப்பிடப்படும் சமத்துவம், மனித உரிமை போன்ற கூறுகள் இருப்பதாகக் கூறுவது ஏற்புடைய கருத்து அல்ல என்பதாகக் கூறுகிறார். இது அக்காலத்தில் வாழ்ந்த ஒரு சில குலத்தினரால் ஒதுக்கி வைக்கப்பட்ட விசயமாகக் கூறுகிறார். கிருஷ்ணன் அவர்களுடைய கருத்து ஏற்புடையதாகக் கருதப்பட்டாலும், பழங்கால வாழ்க்கை முறையைத் தற்காலக் கண்ணோட்டத்தில் பார்த்து அதனை நியாயப் படுத்துவதோ அல்லது குற்றம் காண்பதோ பொருத்தமானதன்று. கௌத்தில்யரால் பரிந்துரைக்கப்பட்ட பல்வேறு சமூகக் கூறுகளான பயனீட்டாளர் பாதுகாப்பு, வனவிலங்குப் பாதுகாப்பு, சமூக நலன் பேணுதல் போன்ற பல்வேறு அம்சங்களை மௌரியப் பேரரசு செயல்படுத்திப் பொது நலன் காப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்திருந்தது. மேலும், கிருஷ்ணன் தனது ஆய்வில் அரசியல் கட்டுப்பாட்டிற்காக அமைக்கப்பட்டிருந்த பொருளாதார நிலை குறித்து எதுவும் கூறவில்லை. இந்நூலில் இவர் குறிப்பிட்டுள்ள ஆளுமை அல்லது ஆட்சி என்பது நவீனக் கருத்துரு என்பது இந்த ஆய்வில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் இது மன்னரின் முடியாட்சி, அல்லது நிலப்பிரபுத்துவம் எனப்படும் பழமையான கொள்கைகளில் இருந்து உருவாகியிருக்கலாம் என்பதயும் சிந்திக்க வேண்டும். பழங்காலத்து அரசியல் அமைப்பில் உள்ள சில அறியாமைக் கொள்கைகளை முன்னிருத்தி அந்த அமைப்பு முறையை முற்றிலும் துடைத்தொழிப்பதைக் காட்டிலும் தற்காலச் சிந்தனையாளர்கள் பண்டையச் சாமூகங்களில் காணப்பட்ட நேர்மறையான சிந்தனைகளை எடுத்து அதனைச் சமகாலத் தேவைகளுக்கு ஏற்ப மேம்படுத்துவது சாலச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

விட்டல் என்பார் அர்த்த சாத்திரம் குறித்து எழுதியுள்ள ஆய்வேடு (2011) அர்த்தசாத்திரத்தின் முக்கியத்துவத்தை வலுவாக ஆதரிக்கும் வண்ணம் அமைந்துள்ளது. அர்த்தசாத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போர் மற்றும் ஆட்சிமுறை ஆகியன பண்டையக் கலைகளில் காலம் கடந்து நிற்கக் கூடிய கருத்துகளாக இந்த ஆய்வு கூறுகிறது (p.1). கௌத்தில்யர் ஒரு சாம்பிராஜ்யத்தின் செழிப்பும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டுமாயின் மன்னன் சில வேளைகளில் மக்களைக் கட்டுப்படுத்தி / அடக்கி ஆள வேண்டிய செயலைச் செய்ய வேண்டும் என்று உரைக்கின்றார். இதன் அடிப்படையிலேயே மேற்கத்திய

நாகரீகம் அர்த்தசாத்திரத்தை கொடூரமான அடக்குமுறையக் கொண்ட நெறியாகக் சுட்டிக் காட்டுகிறது என்பதை இலகுவாகத் தாம் கண்டு பிடித்ததாக விட்டல் தமது ஆய்வில் கூறியுள்ளார். மேற்கத்தியர் தனது பார்வையில் கௌதில்யரை எப்படிக் கருதினாலும் விட்டல் அவரை ஒரு புகழ்பெற்ற மனிதநேயவாதியாகவே உயர்த்திக் கூறுகின்றார். கௌதில்யரின் அரசியல் சாணக்கியத்தை ஆய்வு செய்ததின் அடிப்படையில் அவரின் அரசியல் சிந்தனைகள் அனைத்தும் சிறந்த ஆட்சியைக் கொடுப்பதில் முதன்மையான கவனம் செலுத்துவதால், அவர் வாழ்ந்த காலத்தில் அவரது சமகாலத்தவர்கள் அவரை உயர்வாக மதித்தனர் என்பதைத் தனது ஆய்வில் கூறியுள்ளார் (ஜீ.12). இன்னும் தெளிவாகக் கூற வேண்டும் என்றால், கௌதில்யர் நாட்டின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைகளில் யதார்த்தமான போக்கைக்கொண்டிருந்த போதும், நாட்டு மக்களின் நலன் என்று வரும் போது அதற்கு முதன்மை அளித்து அது விசயத்தில் தனது தாராளப் போக்கைக் காட்டியுள்ளார். கௌதில்யர் மன்னரின் தனிப்பட்ட ஆதாயத்திற்காக நெறிமுறையற்ற செயல்பாடுகள் எதனையும் ஆதரிப்பவர் கிடையாது. மாறாக நாட்டின் நன்மைக்காகவும் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காகவுமே அவர் இராஜ்ஜியத்தை விரிவுபடுத்தும் செயலை முன்னெடுத்துள்ளார். நாடு ஆபத்தில் இருக்கும்போது மட்டுமே இவ்வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டதாக நியாயப்படுத்திய போதும் மக்களின் நன்மைக்காகவே இந்தச் செயல்பாடுகள் அனைத்தும் நடத்த அனுமதிக்கப்பட்டன என்பதுவும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

கௌதில்யர், நேர் எதிர் சித்தாந்தங்களை உடைய அசுரகுரு சுக்கிராச்சாரியார் மற்றும் தேவகுரு பிரகஸ்பதி ஆகியோரின் சிந்தனைகளைக் கைகொள்வதில் தர்க்க ரீதியான மனப்பான்மையைக் கொண்டிருந்தார். கௌத்தில்யர் எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் எதிர் கருத்துகளையும் சேர்த்துப் பரிசீலிப்பதில் ஆர்வத்தை உடையவர் எனப் பிள்ளை அர்த்தசாத்திரம் 1 (2013) எனும் நூலில் சுட்டிக்காட்டுகிறார். பிள்ளை, கௌதில்யரால் கூறப்படும் 'இராஜரிஷி' கொள்கையைப் பற்றி நன்கு இந்நூலில் விளக்குகிறார். மேலும் இதே நூலில் நவீன நிர்வாகத்திறன் குறித்த கருத்துகளைக் கண்டுபிடிப்பதிலும் அதிக இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அர்த்தசாஸ்திரத்தின் மற்ற நூல்கள் குறித்தப் பகுப்பாய்வானது தலைமைத்துவத்துடன் தொடர்புடையதாக இருப்பதாகத் தற்போதையை ஆய்வில் தெரிய வருகிறது. எது எவ்வாறாயினும் கௌத்தில்யரைப் பொருத்தவரை போர் என்பது இவரது கடைசி நடவடிக்கையாக இருந்ததால்தான் அர்த்தசாஸ்திரத்தின் கடைசிப் பகுதியில் போர் வைக்கப்பட்டுள்ளது என்பதைப் பிள்ளை சரியாக எடுத்துக்காட்டியுள்ளார். மேலும், தனது ஒவ்வொரு கருத்தையும் மிக நுணுக்கமாகச் செம்மைப்படுத்துவதில் கௌடில்யரின் தொலைநோக்குப் பார்வையை பிள்ளை படம் பிடித்துக் காட்டியுள்ளார். அதனால்தான் அர்த்தசாஸ்திரம் மிகப்பழமையான நூலாக விளங்கிய போதும் இன்றைய காலத்திற்கும் பொருத்தமானதாக உள்ளதாகப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இது காலத்தால் மாறாத வகையில் மனதின் உளவியல் சார்ந்து கௌத்தில்யர் ஆற்றியுள்ள பெரும் பணிக்குச் சான்றாகிறது (p.6).

அடுத்து விட்செல் (Witzel) என்பாரின் கௌத்தில்யரின் அர்த்தசாஸ்திரம் (2012) குறித்த ஆய்வையும் இவ்விடம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இவர் அர்த்தசாத்திரம் காலம் கடந்து மக்கள் மத்தியில் தனது தாக்கத்தை நிலைநிறுத்தியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். இதுவல்லாது கௌத்தில்யரின் அர்த்தசாஸ்திரம் மேற்கத்திய உலகில் பிற படைப்புகள் மூலம் மறைமுகமாகத் தாக்கத்தை ஏற்படுத்தியதற்கான சாத்தியக் கூறுகளை வரலாற்றின் தடத்தை ஆராய்ந்து முன்வைத்துள்ளார் (p. 14). இருப்பினும், கௌதில்யர் காலத்திற்கும் முந்தைய அறிஞர்களான பிளேட்டோ மற்றும் கன்பூசியஸ் போன்ற

அறிஞர்களின் கருத்துகளுக்கு கௌதில்யர் ஆட்பட்டிருக்கலாம் எனும் கருத்திற்கும் இவரது ஆய்வு முக்கியத்துவம் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவரது ஆய்வில் ஒரு நிர்வாகம் எப்படி இருக்க வேண்டும் என்பது மட்டும் அல்ல மாறாக அது ஏன் இருக்க வேண்டும் என்பதற்கான விவாதத்தில் கௌதில்யரின் தத்துவத் தாக்கங்கள் கோடிட்டாற்போல வருவதை மறுக்க இயலாது. இதனை இன்னும் தெளிவாகக் கூற வேண்டும் என்றால், அர்த்தசாத்திரம் என்பது நிர்வாகம், செயல்பாடுகள் மற்றும் அதன் வரையறைகள் ஆகியவற்றை விளக்க எழுந்த முதன்மை நூல்களுள் ஒன்றாக விளங்குவதோடு மட்டுமல்லாமல் இது ஒரு நிர்வாகத்தின் நோக்கம், குறி, அடைவு ஆகியவற்றையும் விளக்குவதாக அமைகிறது எனலாம் (p.13).

அடுத்து தாஸ் மற்றும் மஹாபத்ரா (2012) ஆகியோரின் அர்த்த சாத்திரம் குறித்த ஆய்வும் இவ்விடம் நோக்கத்தக்கது. கௌத்தில்யரின் அரசாட்சி குறித்த சிந்தனையானது, நவீன வர்த்தக நிர்வாகத்துடன் வலுவாகப் பொருந்துவதாக இவர்கள் தங்களின் ஆய்வில் சான்றளித்துள்ளார். தங்களின் கட்டுரையில் இவர்கள் காப்ரேட் நிறுவனத்தில் கணக்கூடிய மிக முக்கிய கூறுகளான கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு, வணிக நெறிமுறைகள் போன்றவற்றை அர்த்தசாத்திரத்துடன் தொடர்புபடுத்தும் போது அதற்கான ஆதாரங்களை பலமாகக் கொடுக்கவில்லை. இது இக்கட்டுரையில் ஒரு பலவீனமாகப் பார்க்கப்பட்டாலும் கூட, இக்கட்டுரை இன்று கார்ப்பரேட் உலகத்திற்குப் பொருத்தமான நடைமுறைகள் மற்றும் கருத்துகளை நன்கு ஆராய்ந்து முன்வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் கௌத்தில்யரின் ஒரு தேச அரசாட்சிக்கு முக்கியமாக விளங்கக் கூடிய ஏழு சித்தந்தக் கூறுகளை நவீன கார்ப்பரேட் துறையில் உள்ள ஏழு தூண்களுக்கு இடையில் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளது இக்கட்டுரை (p.14).

தொடர்ந்து ஸ்டார்ஸ்ல் (Starzl) மற்றும் திர் (Dhir) (1986) ஆகியோரின் அர்த்தசாத்திரம் குறித்த ஆய்வும் தலைமைத்துவத்தைப் பார்ப்பதில் முக்கியத்துவம் உடையதாகவே உள்ளது. கௌத்தில்யரின் அஸ்தசாத்திரம் கூறும் அரசாட்சி நிர்வாக முறைக்கும் கார்ப்பரேட் உலகத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை இக்கட்டுரை முன்வைக்கிறது. இவர்களுடைய ஆய்வின்படி தற்போதைய கார்ப்பரேட் நிர்வாகமானது கட்டுபாடுகள் அற்றதாகக் இவர்கள் கூறுகிறார்கள். அதே வேளையில் கௌத்தில்யர் வகுத்த அரசாட்சி முறையானது கார்ப்பரேட் நிர்வாகத்தை விட மிக அதிகமான போட்டிகளை எதிர்கொண்டதோடு வேகமான செயல்திறன்களை உடையது எனவும் அறியப்படுகிறது (p. 76). தங்களது ஆய்வில் இவர்கள் அர்த்தசாத்திரத்தின் கருப்பொருளை முன்வைத்துள்ளதோடு கௌதில்யரின் மன்னராட்சியின் அமைப்பியலை நவீன நிர்வாகத்துடன் ஒப்பிட்டுள்ளனர். இந்த ஆய்வின் வழி, நவீன உலகில் அர்த்தசாஸ்திரத்தைப் பயன்படுத்துவதற்கான திறவுகோலானது பண்டைய அரசுக்கும் நவீன நிறுவனத்திற்கும் இடையிலான கட்டமைப்பு ஒற்றுமையில் உள்ளது என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

உண்மையில், கௌடில்யரின் தலைமைத்துவக் கட்டமைப்புகள் மற்றும் குறிக்கோள்கள் ஆகியன வெளிப்படையாகச் கையாளப்பட்டதால் இது நவீன கோட்பாட்டாளர்களின் அணுகுமுறையை விட மேம்பட்டதாகவே தெரிகிறது, இதில் மிக முக்கியமாக அர்த்தசாஸ்திரம் நவீன காலத்தில் நிர்வாகத்தில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான திறனை வெற்றிகரமாக அமைத்துள்ளது இவர்களின் ஆய்வின் மிக முக்கியமான கண்டுபிடிப்பாக விளங்குகிறது.

அர்த்தசாஸ்திரம் பற்றிய இலக்கியங்கள் அனைத்தும் ஓர் அரசனின் கடமையானது தலைமைத்துவத்தில் விருப்பம் கொள்வதாகும் என விவாதிக்கிறது. அலெக்சாண்டர் (Alexander) மற்றும் பக்கிங்ஹாம் (Buckingham) (2011) ஆகியோர் அர்த்த சாத்திரத்தை இக்கருப்பொருளில் ஆராய்ந்துள்ளனர். இந்த ஆய்வு கௌதில்யர் மற்றும் அசோகர் ஆகியோரின் பார்வையில் ஒரு அரசனின்

கடமைகள் என்ன என்பது குறித்து ஆராய்ந்துள்ளது. நல்ல அணுகுமுறையின் அடிப்படையில் இவ்விருவருக்கும் இடையே ஒரு அடித்தளம் உள்ளது என இந்த ஆய்வு கூறுகிறது. இவ்விரு சிந்தனையாளர்களும் மன்னனின் செழுமையும் அதிகாரமும் அவனது மக்களின் நலனைச் சார்ந்தது என்பதில் ஒருமித்த கருத்துடையவர்களாகக் காணப்படுகின்றனர். மேலும் மக்களின் பொது நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நெறிமுறையை உடைய தலைமை மட்டுமே அரசனுக்குப் பாதுகாப்பை அளிக்க முடியும் என்பதனையும் இந்த ஆய்வுக் கட்டுரை முன்வைக்கிறது (p. 317). இதுவல்லாது இக்கட்டுரையானது நல்ல நிர்வாகத்தில் சரியான அணுகுமுறைகளைப் பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் விவாதிப்பதுடன் சமகால வணிக சூழ்நிலையில் அதனைப் பொருந்திப் போகும் தன்மையையும் விளக்கிக் காட்டுகிறது. முடிவாக, கார்ப்பரேட் நிர்வாகத்தில் நிகழும் ஊழல்களைத் தவிர்க்கச் சமகால வணிக நிர்வாகத்திற்கான மூன்று முக்கியமான தலைமைத்துவ பாடங்களை அர்த்தசாஸ்திரத்திலிருந்து கட்டுரை விரிவாக விவாதிக்கிறது (pp. 322 325).

அடுத்து சந்தோஷ் (Santhosh) மற்றும் ரெஜி (Reji) (2016) ஆகியோரின் ஆய்வானது அரசனின் கடமைகள் குறித்து ஆய்வதாக அமைந்துள்ளது. இந்த ஆய்வுக் கட்டுரை அரசனின் கடமைகளை நிறுவனத்தின் இயக்குநர் குழுவுடன் ஒப்பிடுகிறது. இக்கூற்றை நிலைநிறுத்த இக்கட்டுரையில் வர்த்தக நிர்வாகத்தின் 4 தூண்கள் மன்னனின் கடமைகளுடன் பொருத்திப் பார்க்கப்பட்டுள்ளது (p. 401402). ஆயினும் இதில் குறிப்பிட்டுள்ள இந்த நான்கு தூண்களும் ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டில் இருந்து உருவாக்கப்பட்டவை. இது போல வேறு சில கோட்பாடுகள் வர்த்தக நிவாகம் குறித்து வெவ்வேறு எண்ணிக்கையிலான தூண்களை வழங்குகின்றன. இதன் அடிப்படையிலிதில் இக்கட்டுரைக்கு ஆழ்நிலை ஆய்வும் மேம்பட்ட விளக்கங்களும் தேவையானதாகும். ஆயினும்கூட, இந்தியாவில் வர்த்தக ஊழல்களற்ற நல்ல நிர்வாகத்தை அடைவதன் முக்கியத்துவத்தை இந்தக் கட்டுரை காட்டுவதோடு, இந்திய வர்த்தக நிறுவன நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதில் அர்த்தசாஸ்திரத்தின் பல்வேறு அம்சங்களையும் இக்கட்டுரை நிறுவுகிறது.

அடுத்து பட்டாசார்ஜி (Bhattacharjee) (2011) என்பார் பண்டைய இந்தியர்களின் அறச்சிந்தனைகளின் அடிப்படையில் இந்தியாவின் பெருநிறுவனங்கள் ஊழல்களை களைந்து நிலையான நிர்வாகத்தை அமைப்பதற்கான சிந்தனைகளை தகுந்த நிர்வாக மாதிரிகளைக் கொண்டு வடிவமைத்துள்ளார். இதன் அடைவாக, அவர் தனது இலக்குகளை அடைவதற்கு ஆறு நெறிப் பாதையை அமைத்து அதனை நவீன மாதிரிகள் மற்றும் பண்டைய இந்தியக் கொள்கைகளுடன் ஒப்பிட்டுள்ளார். மேலும், இந்த ஆய்வானது பண்டைய இந்தியாவின் பல்வேறு காலகட்டங்களில் பெறப்பட்ட இந்தியத் தத்துவங்களை நவீன மேலாண்மைக் கருத்துகளுடன் ஒப்பிட்டுள்ளது. அதோடு கௌதில்யரின் போதனைகளின் அடிப்படையில் தலைமைத்துவத்தின் ராஜரிஷி எனும் சித்தாந்தத்தை முன்னுதாரணமாக இக்கட்டுரை எடுத்தாண்டு அதனை நவீனத் தலைமைத்துவப் பண்புகளுடன் எவ்வாறு ஒருங்கிணைக்க முடியும் என்பதைப் பட்டியலிட்டுள்ளது (ஜீ. 27 28). இதுவல்லாது பண்டைய இந்தியாவின் தத்துவ நெறிமுறைகளின் அடிப்படையில் அறிவுப் பரிமாற்றம் மற்றும் அறிவுப் பகிர்வு போன்ற சிந்தனைகளைச் செம்மையாக முன்வைத்துள்ள இக்கட்டுரை பாராட்டுக்கு உரியதே. நிறைவாக, தற்போதுள்ள தலைமைத்துவம் மற்றும் நவீன நிர்வாகத்தின் கொள்கைகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதில் பண்டைய இந்திய நிர்வாக நெறிமுறைகளின் முக்கியத்துவத்தை உடையயனவாக உள்ளன என்பதனை நவீன சிந்தனையாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

அடுத்து, வல்லப (Vallabh) மற்றும் தாதிச் (Dadhich) (2016) ஆகியோரின் ஆய்வானது

அர்த்தசாத்திரம் பற்றிய ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பெருநிறுவன ஆளுகைக் கருப்பொருளை முன்னிருத்துவதாக அமைந்துள்ளது. இந்தக் கட்டுரை அர்த்தசாத்திரம் மற்றும் மனுஸ்மிருதி போன்ற பண்டைய நூல்களில் உள்ள பெருநிறுவன ஆளுகையின் நெறிமுறைகளை வசுதேவ குடும்பகம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஆய்வு செய்துள்ளது. வாசுதேவ குடும்பகம் என்பது உலக மக்கள் அனைவரும் ஒரே குடும்பம் எனும் தத்துவத்தை விளக்குவது ஆகும். இதன் வழி நிர்வாகத்தில் முடிவு ஒன்றை மேற்கொள்ளும் போது அங்கு ஆன்மீகத் தலைமைத்துவத்தையும் கட்டமைப்பையும் உள்ளடக்குவதை இது வலியுறுத்துகிறது. ஒரு நிறுவனத்தின் நன்னெறிக் கோட்பாட்டில் அமைக்கப்பட்ட நிர்வாகத்திற்காக கார்ப்பரேட் ஆளுகை மாதிரியை உருவாக்குதல், ஐந்துபட்டியில் முடிவெடுக்கும் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் வர்த்தக நிறுவன நிர்வாகத்தின் நெறிமுறைகள் மற்றும் நிறுவனத் தலைமையின் நெறிமுறை நடத்தைக்கான நால்வகைக் கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியன இந்தக் கட்டுரையின் பலமாகக் காணப்படுகின்றது. மேலும், வணிகச் செயல்பாடுகளைப் பற்றிய விவாதங்களுக்கு விளக்கப்படங்கள், வரைபடங்கள் மற்றும் சூத்திரங்கள் போன்றவற்றைத் திறம்பட பயன்படுத்துவதன் மூலம் கார்ப்பரேட் நிர்வாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் ஏன் முக்கியத்துவம் உடையனவாக உள்ளன என்பதையும் இந்தக் கட்டுரை உறுதியான நிலைநிறுத்துகிறது.

தொடர்ந்து ஷர்மா (1994) என்பார் விஜிகிசுவை (Vijigisu) தலைமைத்துவத்தின் கருதுகோளாகக் காட்டுகிறார். இவர் நவீன வணிக நடவடிக்கைகளை எவ்வாறு MTAசுவின் 'யோகாக்ஷேமாவால்' கோட்பாட்டால் வழிநடத்தப்பட வேண்டும் என்ற சிந்தனையையும் வர்த்தக ஸ்தாபனத்தை இக்கோட்பாட்டைக் கொண்டு எவ்வாறு மற்ற பிராந்தியங்களுக்கு விரிவுபடுத்த இயலும் என்பதனையும் இக்கட்டுரையின் மூலம் சுட்டுகின்றார். இக்கட்டுரையின் பலம் இதன் பகுப்பாய்வு. இதன் பகுப்பாய்வு மனித இயல்பின் மீது கௌத்தில்யர் செய்த அனுமானங்களை எடுத்துக்காட்டுவதோடு, அதற்கான மாதிரியையும் உருவாக்கியுள்ளது (p.169). கௌத்தில்யரின் சாம, தான, பேத, தண்டம் எனும் நால்வகை உபாயங்களையும் தன்முனைப்பு வழிமுறைகள் மற்றும் அது சார்ந்த பல்வேறு உத்திகளுடன் இக்கட்டுரை இணைத்துப் பார்த்திருப்பது சிறப்பான ஒன்றாகக் காணலாம். ஷர்மா இவற்றை ஆளுமை வகைகள் மற்றும் தன்முனைப்பு வழிமுறைகள் என்பனவாக அட்டவணைப்படுத்தி அதனை மேலும் ஙீ கோட்பாடு மற்றும் சீ கோட்பாடு ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தியுள்ளார் (p.167 - 170). மேலும், ஷர்மா ஒரு நபருக்கு முக்கியமான பொறுப்புகளை வழங்குவதற்கு முன்பு சோதிக்கப்பட வேண்டிய பல்வேறு வகையான திறன்களையும் இக்கட்டுரையில் ஆராய்கிறார். அதோடு பயிற்சியின் மூலம் இந்தத் திறன்களை உருவாக்குவது மற்றும் 'பயிற்சியளிக்கக்கூடிய' நபரை அடையாளம் காண்பது போன்றவையும் இக்கட்டுரையின் கண்டுபிடிப்புகளாக உள்ளன.

இந்த அர்த்தசாத்திரம் குறித்த ஆய்வு முன்னோடிகள் வரிசையில் மீண்டும் பிள்ளை (2010) அவர்களின் மற்றொரு ஆய்வு குறித்துப் பேசாமல் இந்த ஆய்வு நிறைவடையாது எனலாம். இந்த ஆய்வில் இவர் கௌத்தில்யரின் மூன்று முக்கியப் பங்களிப்புகளை தற்கால வர்த்தப் பெருநிர்வாகத்திற்குத் பொருந்துமாறு தலைமை, மேலாண்மை மற்றும் பயிற்சி எனும் கருக்களில் மூன்றாகப் பகுத்துள்ளார். இந்தப் புத்தகம் கௌத்தில்யரின் பார்வையில் இருந்து தலைமைத்துவம் மற்றும் நிர்வாகத்தைப் பற்றிய நல்ல நுண்ணறிவுகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அர்த்தசாத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தாண்டி தனிப்பட்ட பகுப்பாய்வு மற்றும் நிர்வாக உதவிக்குறிப்புகளையும் வழங்குகிறது. எடுத்துக்காட்டாக, பகுதி 1 (தலைமை), உண்மையான சக்திக்கு வழிவகுக்கும் காரணிகள் மற்றும் புலன்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அதிகாரத்தை

எவ்வாறு தக்கவைத்துக்கொள்வது என்பதைப் பற்றி பிள்ளை இவ்விடத்தில் விவாதிக்கிறார். அது மட்டுமின்றி, போட்டியைக் கையாள்வதற்கான உத்திகளையும் இந்நூல் சுட்டிக்காட்டுகிறது. மேலும் கௌத்தில்யரின் விளையாட்டுக் கோட்பாட்டையும் இவ்விடத்தில் பிள்ளை எடுத்துக் காட்டுகிறார் (ஜீ. 76). இந்நூல் முழுவதும் அர்த்தசாத்திரச் சுலோகங்கள் பற்றிய குறிப்புகளை பிள்ளை விளக்கங்களுடன் வழங்கியுள்ளார். அர்த்தசாத்திரத்தில் தலைமைத்துவம் மற்றும் நிர்வாகக் கருத்துகளைப் பிரித்தெடுத்து, நவீன வணிகச் சூழ்நிலையில் அவற்றை விரிவுபடுத்தி அமைந்துள்ள இந்த நூல் தலைமைத்துவ ஆய்வுக்கு நல்லதொரு வழிகாட்டியாக உள்ளது.

### முடிவுரை

ஆய்வு முன்னோடிகளின் கண்டுபிடிப்புகளை முன்னிருத்தி மேற்கொள்ளப்பட்ட இக்கட்டுரையானது தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்துவதில் கௌத்தில்யர் மகத்தான பணியைச் செய்துள்ளார் என்பதனைத் தெளிவாகக் கண்டறிந்துள்ளது. தலைமைத்துவத் துறைகளில் கௌத்தில்யார் மகத்தான பங்களிப்பைச் செய்துள்ளார், மேலும், கௌத்தில்யரின் தலைமைத்துவம் மற்றும் நிர்வாகம் குறித்த உண்மையான மூலக் கருத்துகளும் இந்த ஆய்வின் வெளிப்பட்டுள்ளன. கௌத்தில்யரின் ஞானத்தினால் விளைந்த முத்துக்களை நாம் சரியான முறையில் பிரித்தெடுக்க முடிந்தால், அர்த்தசாத்திரம் கூறும் பல சிந்தனைகள் இன்றும் பொருந்தக்கூடிய ஒன்றாகவும் இந்நூல் காலத்தை வென்ற நூலாகவும் விளங்கும் என்பது இந்த ஆய்வில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் பயனாக அர்த்தசாஸ்திரத்தில் உள்ள தலைமைத்துவச் சிந்தனைகளை மேலும் ஆய்வு செய்ய ஆய்வாளர்கள் முன்வருவார்கள் என்றும் நம்பப்படுகிறது.

## References


Alexander, John M. & Buckingham, Jane. (2011). *Common Good Leadership in Business Management: An Ethical Model from the Indian Tradition*. Business Ethics: A European Review. Vol. 20, No. 4, pp. 317 – 327.

Bhattacharjee, Anindo. (2011). *Modern Management through Ancient Indian Wisdom: Towards a More Sustainable Paradigm*. Purusharta. Vol. 4, No. 1, pp. 14 – 37.

Das, Sanjit K.R. & Mahapatra, SMT Debashree. (2012). *Business Ethics and Society: An Insight to Arthasastra.* International Journal of Social Sciences & Interdisciplinary Research. Vol. 1, No. 4, pp. 14 – 18.

Krishnan, Shri. (2009). *Ploughmen, Wild Tribes and the Monarchy: Reflections on the Notion of 'Good Governance' in Kautilya's Arthashastra*. International Journal of South Asian Studies. Vol. 2, No. 1, pp. 88 – 96.

Pillai, Radhakrishnan. (2018). *Corporate Chanakya: Successful Management the Chanakya Way*. 4th Edition. Mumbai, Jaico Publishing House.

Rangarajan, L. N. (1992). *Kautilya: The Arthashastra*. Haryana, Penguin Books India.

Santhosh, T.R. & Reji, M.A. (2016). *Influence of Ancient Indian Scriptures on Corporate Governance Framework.* International Journal of Research in Social Sciences. Vol. 6, No. 2, pp. 395 – 404.

Sharma, Subhash. (1994). *Management Ideas in Arthasastra*. Indian Journal of Public Administration. Vol. 40, No. 2, pp. 165 – 182.

Starzl, Timothy W. & Dhir, Krishna S. (1986). *Strategic Planning 2300 Years Ago: The Strategy of Kautilya*. Management International Review. Vol. 26, No. 4, pp. 70 – 77.

Vallabh, Gourav & Dadhich, Garima. (2016). *Corporate Governance and Ethical Compliance – Deriving Values from Indian Mythology.* Theoretical Economics Letters. Vol. 6, pp. 1128 – 1144.

Vittal, Vinay. (2011). *Kautilya's Arthashastra: A Timeless Grand Strategy*. Alabama, School of Advanced Air and Space Studies.

Witzel, Morgan. (2016). *A History of Management Thought. 2nd Edition*. Oxfordshire, Routledge.